# புதுமைப் பாடல்கள்.

ஆக்கியோன்.

தோழர். வெ. நா. திருமூர்த்தி.

வெளியீடு.
"புதுமைக் கலா மன்றம்"
ஈரோடு.

T21139
R004F02

விலை. இரண்டணா.

1

# வீரத் தியாகி

(காதல் பலியாகி நீயும் என்ற "மந்திரிகுமாரி" மெட்டு)

வீரத்தியாகி பாலுநீயும் புத்துலகச் சிற்பியே
போர்க்கொடி ஏந்தியே தூக்குமேடை ஏறினாய்
பார்தனில் நின்னையே தியாகத்தின் சின்னமாய்
பாட்டாளி வர்க்கமே போற்றிடவே ஆகினாய்
சதிகாரர் ஆளுகைக்கே சவக்குழி தோண்டினாய்
சலியாது வீரங்கொண்டே வர்க்கப்போர் தாண்டினாய்
ஏழைமக்களின் வாழ்வு ஓங்கவே
ஈடில்லா உனதுடல் ஆவிபொருள் ஈந்தனை
மார்க்ஸீய போதம் பெற்ற மாசில்லா தியாகச் சின்னம்
வளரும்நம் புதுஉலகிற்கே வழிகாட்டும் வீரச்சின்னம்
உனது கனவையே நனவதாக்கவே
ஒன்றுபட்டுப் போரிட இன்றே சபதமேற்கின்றோம்

(எண்ணிஎண்ணிப் பார்க்கமனம் என்ற வாழ்க்கை மெட்டு)

யுத்தவெறிக் கழுதைகள் கத்துங்குரல் கேட்குதே
ஊக்கி உலகத்தை முற்றும் ஆக்ரமிக்கப் பார்க்குதே
பொல்லாத யுத்தமே இல்லாமல் செய்யவே
நல்லதொரு சேவையில் எல்லோரும் சேருவோம்—நாம்
எல்லோரும் சேருவோம்
கூடிக்கூடி ட்ரூமன் கும்பல் கொம்மாளம் போடுறார்
கொரியாவில் சண்டை மூட்டி சரியாய் உதை வாங்குறார்
வார்சா மகாநாட்டுத் தீர்மானம் ஓங்கவே
மானிலத்தில் சமாதான கோஷங்கள் எழுப்புவோம்—நாம்
கோஷங்கள் எழுப்புவோம்
ஆசியாவின் நிரந்தர அமைதியைக் காக்கவே
அணுகுண்டைத் தடைசெய்ய யாவரும் ஒன்றாகுவோம்

———

# உலக சமாதானம் ஓங்குக

1. தரணியெங்கும் சமாதானம்
   தழைக்கச்சேவை செய்யடா
சர்வதேச நிலையுணர்ந்து
   தருணம்மன துவையடா
கொரியா என்ற சிறிய நாட்டின்
   நிரபராதி மக்களை
கொன்றுகுவிக்கும் டாலர்வெறியர்
   கோரசாட்சி பாரடா

2. தொன்றுதொட்ட நேகநாட்டைச்
   சுரண்டிக்கொழுக்கும் வெறியர்கள்
துணிந்து மக்கள் உதைகொடுத்துத்
   துரத்துகின்ற போதிலே
நின்று போகும் கொள்ளை முற்றும்
   நிரந்தரம் கிடைக்கவே
நிலத்தில் யுத்தமூட்டி மீண்டும்
   வளைத்துக்கொள்ளப் பார்க்குகிறார்

3. மக்கள் யுகத்திற் புதுமைகண்ட
   மார்க்ஸிஸத்தைத் தடுக்கவே
மார்ஷல் திட்டவலைக்குள் தள்ளி
   மற்றநாட்டைச் சுரண்டவே
ஐக்யநாட்டை ட்ரூமன் கும்பல்
   கைக்குள் போட்டு உலகையே
அடக்கியாளமூன்றும் யுத்தத்தொடக்கமிந்த ஒத்திகை

4. மாண்டுமடியும் ஏழைஎளிய மக்கள் உயிரை மீட்கவே
வையமெங்கும் அமைதிநிலவ
   வார்சா காட்டும் வழியிலே
மீண்டும் யுத்தவெறியர் திட்டம்
   வீழ்ந்தொழிந்து என்றுமே
மேவஉலக சமாதானம் யாவரும் ஒன்றுகுவோம்.

(இந்த உலகினில் வாழும் மாந்தரின் என்ற கஞ்சன் மெட்டு)

1. வஞ்ச உலகினில் மாயும் ஏழ்மையில்
வாழ்விழந்தோன் நெசவாளி—உயர் (வாழ்வி)
கொஞ்சமோ பல குடும்பமெங்கினும்
கொடுமைகுள்ளாகினர் நாட்டில்-மீளாக் (கொடுமை)

2. வைய மாந்தரின் மானம் காப்பவர்
மரபில் வந்தோன் நெசவாளி—உயர் (மரபி)
நெய்ய நூலின்றி உய்யவேறின்றி
நிலைகுலைந்தான் புவிவாழ்வில்—அந்தோ (நிலைகுலை)

3. கந்தையுமின்றி கஞ்சியுமின்றி
கலங்கிடுவான் நெசவாளி—கண் (கலங்கிடு)
சிந்த நீர்விழி எந்த நேரமும்
தெருத்தெருவாய்ப் பிச்சைகேட்பான்-கெஞ்சி(தெரு

4. நலிந்து நாட்டிலே நடைப்பிணமாக
நாதியற்றான் நெசவாளி—அந்தோ (நாதியற்)
இவர்—இழந்த வாழ்விலே இன்பம் சேர்க்கவே
இயக்கம் சேரடா தோழா—புது (இயக்கம்)

5. தொழில் நிலங்களும் விளையும் இன்பமே
சொந்தமதாக்கிட நாட்டில்—நம் (சொந்த)
தொல்லையே தரும் சுரண்டலாட்சியை
சுக்குநூறாக்கடா தோழா—நீ (சுக்கு)

6. கற்பையும் சிலர் விற்கநேர்ந்ததே
காங்கிரஸ் ஆட்சியினாலே—இந்த (காங்கி)
வர்க்கப் போரிலே இக்கொடும் ஆட்சியை
மாற்றியமையடா தோழா—விரைவில் (மாற்றி)

# இன்பம்யாவும் படைத்திடுவீர்

(இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே என்ற பாரதி மெட்டு)

1. இருண்ட வாழ்வை உடைத்தெறிவீரே
இன்பம் யாவும் படைத்திடுவீரே
சுரண்டல் ஆட்சியைத் தீர்த்திடுவீரே
தோளில் வலிமையைச் சேர்த்திடுவீரே
வெருண்டு ஓடிட துரோகிகள் கூட்டம்
மீண்டும் இழந்த நம் உரிமைகள்கூட
திரண்டு ஐக்கிய முன்னணிப் படையில்
சேர்ந்து போரிட அனைவரும் வாரீர்

2. ஆலைகள் நிலம் தேசிய மயமாய்
ஆடை அணிபொருள் தேவையில் பூர்த்தி
பாலை மருதமாய் மாற்றி விளைத்தே
பாரில் உணவுடைப் பஞ்சத்தைப் போக்கி
வேலை நேரம் நிதம் மணி ஆறாய்
விரும்பும் நல்லுணவுண்டுகளித்து
மாலையில் விளையாடிட இன்பம்
மக்களாட்சி யமைத்திடுவீரே

3. கழகங்கள்தனில் அரசியல் ஆய்ந்து
கல்வியிற்புது நுண்கலை தேர்ந்து
பழகும் நண்பினில் தோழமையோடு
பண்புடன் தமிழ் இன்சொல் வழங்கி
அழகும் இன்பமும் சூழ்ந்தநல் வாழ்வில்
அமைதி நிலவிடவே மனைதோறும்
உழவருந் தொழிலாளரே நீவிர்
ஒன்று சேர்ந்து போராடிட வாரீர்

# காட்டு ராஜ தர்பார்

(நம்மகழுதைமிக நல்லகழுதை என்ற மர்மயோகி மெட்டு)

தொகையறு

சக்தியிலே இரண்டு விதம்
ஜனசக்தி பணசக்தி
ஒன்று—வளரும் சக்திகொண்டதென்ன?
வேறென்று—அழியும் சக்திகொண்டதென்ன?

(பாட்டு)

மெத்தை வீட்டுப் பேர்வழிக்கே சொத்துசுகம்
மென்மேலும் சேர்வதென்ன? பட்டம்பதவி—இங்கே
எத்தனையோ ஏழைமக்கள் நாளுக்குநாள்
எச்சிலைக்குப் போட்டியிடக் காரணம் என்ன?

இதுக்கு—நல்லவிதமா—பதில்
சொல்லவேணுங்க—இப்போ

நாட்டிலே உங்களிடம் நம்பிக்கையே இல்லே
ஆட்டம்கண்ட ஆட்சியிதில் அனைவருக்கும்தொல்லை (நல்ல)
ஆருக்கு சுதந்தரம் கிடைத்தது இப்போ
ஆட்சிக்கு வந்தபிறகு-நீங்க
ஆட்சிக்கு வந்தபிறகு-இப்போ
ஊருமொதலை அடிச்சுக் காருமேலே போறசில
உல்லாசக்காரருக்கா—இல்லை
உழைப்பாளி மக்களுக்கா...........என்பதை (நல்ல)

வசனநடை

கள்ளமார்கெட் நடப்பதும் கொள்ளை லாபமடிப்பதும்
கண்கண்ட சேதியானதெந்த ஆட்சியில்—இங்கு
உள்ளதை எடுத்துச்சொன்னால் தள்ளியே சிறையிலிட
உயிர்கொல்லிச் சட்டமுண்டு உங்கள் ஆட்சியில்

பாட்டு

ஆயிரக்கணக்கில் நெசவாளருக்கு நூலில்லாமல்
ஆலாப்பறக்கிறது எந்த ஆட்சியில்?—தெருவில்
பேயாகத்திரிந்திடப்பிள்ளை குட்டியோடவரைப்
பிச்சைக்காரராக்கியது உங்கள் ஆட்சியில் இதுக்கு-(நல்ல)

வசனநடை

கஞ்சிகஞ்சி யென்றுமக்கள் நெஞ்சுலர்ந்து தெருக்களில்
காணுமிடம் செத்தஉடல் எந்த ஆட்சியில்?—அந்தப்
பஞ்சையரின் குரலுக்கு கொஞ்சமும் செவிசாய்க்காமல்
பஞ்சாங்கம் படிப்பதுண்டு உங்கள் ஆட்சியில்

பாட்டு

எட்டவுன்சும் ஆறவுன்சும் மட்டாக அரிசிக்கு
ஏங்கிநிற்கக் காலம் வந்த தெந்த ஆட்சியில்?—அந்த
எட்டவுன்சு ரேஷன்கூட பட்டிக்காட்டு மக்களுக்கு
ஏமாற்றி வருவது உங்கள் ஆட்சியில்.......இதுக்கு (நல்ல)

வசன நடை முடுக்கு

எங்களை—அஞ்சோ பத்தோ பஞ்சப்படிக்கி
ஆட்டி வைக்கலாமா—நீங்க
ஐநூரூபா போதில்லின்னு பல
ஆயிரம் வாங்கலாமா
லஞ்சப்பதுக்கல் பதவி வேட்டையில்
நாட்டைக் கெடுக்கலாமா—நீங்க
லாயக்கில்லேன்னு ராஜிநாமா இன்னும்
செய்யாதிருக்கலாமா

பாட்டு

கராச்சி தீர்மானம் காங்கிரசு ஆட்சியிலே
கண்டிப்பாய் நடக்குமென்று சொன்னவங்கயார்-இப்போ
கண்டபக்கம் துப்பாக்கிக் குண்டுகள் அடக்குமுறை
காட்டுராஜா தர்பார் நடத்துவது யார்—இதுக்கு (நல்ல)
ஓய் ஆட்சியாளரே இதுக்கு—(நல்ல)

(தூர்ஹட்டோ தூர்ஹட்டோ என்ற "கிஸ்மத்" மெட்டு)

போரிடுவோம் போரிடுவோம்ஜெய
பேரிகை கொட்டிப்
புறப்படுங்கள் தோழர்களே (போரி)

1. வீறுகொண்டன்று சுதந்தரப் போரில்
வெள்ளையராட்சியை முடித்திட்டோம்
வீரன் பகத்சிங் குமரன் போன்ற
வெகுபேரை பலிகொடுத்திட்டோம்
பாரினிலந்தச் சுதந்தரம் இன்று
பகைவோர் ஒரு சிலர் வசமாகி
பணத்தவர் ஆட்சி நடக்குதடா—இதை
படுகுழி தோண்டிப் புதைத்திடவே (போரி)

2. குடிசைகள் தோறும் அடடா நமது
குழந்தைகுட்டி களெல்லோரும்
குய்யோ முறையோ பஞ்சம் பட்டினி
அய்யோ பசியென் றலறிடவே
அடிமைகளாக்கிப் படையின் பலத்தால்
ஆளும் சுரண்டல் சர்க்காரை
அடியோ டொழித்து இனியோர் புதிய
ஆட்சி முறையை வகுத்திடவே (போரி)

3. உழவும் தொழிலும் தேசிய மயமாய்
உழைப்பவர் ஆட்சி நடத்திடவே
உணவும் உடையும் வீடும் வேலை
ஒவ்வொருவர்க்கும் கிடைத்திடவே
எழுவீர் எழுவீர் இறுதிப் போருக்
கிதுவே தருணம் எழுவீரே
இப்புவியெங்கும் யுகப்புரட்சி
எழுந்தது விரைவில் வருவீரே (போரி)

# தொழிலரசு ஓங்குக

(விதியை வெல்வோமே என்ற மெட்டு)

போர்க்கொடி உயர்த்திடுவோம்—நாம்
புது உலகிற்காக—புது உலகிற்காக (போர்)

மூர்க்கத்தன ஆட்சியைப் போக்கி
முதலாளித்வச் சுரண்டலை நீக்கி
பார்க்குள் நம் தொழிலரசோங்க
படை திரண்டே வாரீர்
படை திரண்டே வாரீர் (போர்)

ஆலைகள் தொழிலாளரின் வசமாய்
அவனி நிலம் உழவர்கள் வசமாய்
வாழும் வகை திட்டம் வகுக்க
மக்களாட்சிக்காக
மக்களாட்சிக்காக (போர்)

பதவிவெறி பணத்திமிர் கொண்ட
"பஞ்சாங்கக்" கொள்கையைக் கொண்ட
சதிகாரச் சுரண்டல் சர்க்காரை
தகர்த்தெறிய நாமே
தகர்த்தெறிய நாமே (போர்)

அடக்கி நம்மை சிறையிலிட்டாலும்
அணுவணுவாய்ச் சிதைத்திட்டாலும்
திடத்துடன் நம் கொள்கையில் வெற்றி
கிடைக்கும்வரை நாமே
கிடைக்கும்வரை நாமே (போர்)

தனி உடைமைச் சமூக அமைப்பை
சடுதியிலே மாற்றியமைத்தே
இனி உலகம் சமத்துவமயமாய்
இன்ப வாழ்வுண்டாக்க
இன்ப வாழ்வுண்டாக்க (போர்)

# மேதினமே வருக

(செந்-தமிழும் சுவையும் என்ற "வாழ்க்கை" மெட்டு)

எங்கள்—தொழிலோர் உழவோர் வாழ்விலே—இன்பம்
சூழ்கவே மேதினமே வருவாயே

எங்கள்—துயரும் பயமும் போகவே—வந்து
தோன்றிய மேதினமே வருவாயே

ஓ............மேதினமே
நீ—உழைப்பவர் ஏற்றிய தீபம்

உண்டாகும் பாமரரின் போதம்
கொண்டாடும் எளியவரின் கீதம் (எங்கள்)

வா............மேதினமே
புவி—வறுமையின் இருளகன்றிடவே
முதலாளிகள் ஆதிக்கம் வீழ்ந்திடவே
முதலாளிகள் ஆதிக்கம் வீழ்ந்திடவே
உண்டாகும் பாமரரின் போதம்
கொண்டாடும் எளியவரின் கீதம் (எங்கள்)

தொழில்—எட்டுமணிக்கெனக் கொட்டி முழக்கியே
திட்டம் வகுத்துடனே—போ
ரிட்டதிலே பலர் சுட்டுமடிந்ததின்
வெற்றியின் மேதினமே (எங்கள்)

# எழு இடதுசாரித் தோழா

(நல்ல சமயமடா என்ற நாமக்கல் கவிஞர் மெட்டு)

பல்லவி

நல்ல தருணமடா—இதை
நம்ப மறுப்பாயோ (நல்ல)

அ பல்லவி

சொல்லத் தொலையாத
தொல்லை கொடுத்திடும்
பொல்லாத ஆட்சியைப்
போக்கி விடுவதற்கே (நல்ல)

சரணங்கள்

1. நெஞ்சங் கொதிக்குதடா—சொல்ல
நினைக்கத் தொடங்கு முன்னே
பஞ்சமோ பஞ்சமடா—எங்கும்
பாமரர் வாழ்க்கையிலே

கஞ்சியுமின்றியே
துஞ்சிட நேரிடும்
வஞ்சக ராட்சியை
மாற்றியமைக்கவே (நல்ல)

2. காங்கிரஸ் ஆட்சியிலே—படும்
கஷ்டங்கள் கொஞ்சமோடா
தூங்கிக் கிடப்பாயோ—கொடுந்
துப்பாக்கி சத்தத்திலே

ஓங்கிட ஏழைகள்
பாங்குடன் வாழவே
தீங்கினராட்சியை
நீங்கிடச் செய்யவே (நல்ல்)

3. ஆட்டம் கொடுக்குதடா—பண
ஆதிக்கக் கோட்டையிலே
ஏற்ற சமயமடா—எழு
இடதுசாரித் தோழா

நாட்டைக் கெடுக்கின்ற
டாட்டா பிர்லாக்களின்
கூட்டுறவாட்சியை
ஓட்டிவிரட்டவே (நல்ல)

---

# என்ன உலகமடாயிது

(ஏற்ற ராகத்தில் இசைத்து பாடுக)

1. நெஞ்சங் கொதிக்குது கேளடா—சொல்ல
நினைக்கத் தொடங்குமுன் நாட்டிலே—நாம்
கஞ்சிக்கு உப்பில்லை என்பதும்—சிலர்
கனியொடு பாலன்னம் உண்பதும்—நாம்
பஞ்சாடைக் கந்தைக்குப் பறப்பதும்—சிலர்
பட்டாடை உடுத்திச் சிறப்பதும்-நாம்
அஞ்சிப் புழுக்களாய்த் துடிப்பதும் சிலர்
ஆனந்த போகத்தில் கிடப்பதோ

2. காலத்தின் கோலத்தைப் பாரடா—இந்தக்
கண்மூடி உலகத்தின் நீதியை—நாம்
ஓலைக்குடிசையில் வாழவும்—சிலர்
ஓங்கிய மாடியிற் சூழவும்—நாம்
தோலும் எலும்புமாய்த் தோணவும்-சிலர்
தொந்தியுந் தொப்பையாய்க் காணவும்-நாம்
ஆலைக்கரும்பென மாள்வதும்-சிலர்
ஆனந்த போகத்தில் வாழ்வதோ

3. என்ன உலகமடாயிது-நம்மை
எத்திப் பிழைக்குமிக் கூட்டத்தார்-மிகச்
சின்னஞ்சிறு தொகை ஆமடா-சடல்
சேர்ந்த மணல்தொகை நாமடா-நம்
முன்னேற்றத்தின் முட்டுக்கட்டையை-பொல்லா
முதலாளி வர்க்கத்தின் கோட்டையைச்-சின்ன
பின்னப்பட வெடிவையடா-தப்பிப்
பிழைத்திட நாமிதைச் செய்யடா

4 மக்கள்கைக் சதிகாரம் சேரவும்-படும்
வறுமையும் சிறுமையும் தீரவும்-உள்ள
தக்க நிலம் தொழில் யாவுமே-இனி
சமுக சொத்தாக்கிடில் மேவுமே-இன்பம்
சொக்கிடும் பாமரர் வாழ்விலே-முற்றும்
சுரண்டல் ஒழித்திட்ட நாளிலே-எழு
இக்கணம் புறப்படு தோழனே-வெற்றி
எதிர்கொண்டழைக்குது நவயுகம்.

(ஊசிப்பட்டாசே (என்ற மெட்டு.)

சோறு கேட்டாலே ஏழைகள் மேலே
துப்பாக்கி, வெடி டமீர் டமீர்!
கோரிக்கைக்காக ஊர்வலம் வந்தால்
குண்டாந்தடி, அடி படீர் படீர்!
அடடா இந்த கொடுமையைப் போலே
அறியோமே எந்த நாளும்
ஐய்யய்யோ இதையே எடுத்துச் சொன்னாலே
மெய்யாக நூத்தி நாற்பத்து நாலே
பாமரர் வாழ்வின் கோரத்தைக் கண்ணால்
பார்த்தாலே, மனம் பகீர் பகீர்!
பாரினில் காங்கிரஸ் ஆட்சியினாலே
பட்டோமே, இடர் திடீர் திடீர்!
அதனால் இந்த ஆட்சியை மாற்றி
அமைப்போமே மக்களாட்சி
புது வாழ்வின்பம் எளியோர்கள் காண
போராடுவோமே நாமொன்று சேர்ந்தே. (சோறு)

(டடடா மெட்டு)

தொகையரு

உழைப்பாளர் உலகை ஆளவே
உரிமைகள் யாவும் மீளவே

பாட்டு

அகில இடதுசாரிகளின்
ஐக்கிய முன்னணி உண்டாக்குவோம்
அடியோடினி நாம் கொடியோர் அரசை
முடிவாக்கிடுவோம் விடோம் விடோம்
இனி—கூட்டம் கூடியே தீரணும்
நம்—கொள்கையைச் சொல்லியே தீரணும்
இந்த—ஆட்சியை மாற்றியே தீரணும்
மக்கள்-ஆட்சியை அமைத்தே தீரணும்—அதனால்
சிந்தித்து ஒன்று சேர்ந்தாகணும்—சிறந்த
ஆட்சியை உண்டாக்கணும் (அடியோ)

தொகையரு

தொழிளாளர் ஆட்சி ஓங்கவே
சுரண்டல் முற்றிலும் நீங்கவே

பாட்டு

எழுவீர் இடதுசாரிகளே
இன்ப உலகம் உண்டாக்குவோம்
இடரேபுரியும் கொடியோர் செயலே
அடியோடொழிப்போம்—விடோம் விடோம்
இனி—பட்டினிக் கொடுமையை தடுக்கணும்
பண—அட்டைகள் கொள்ளையை ஒடுக்கணும்
நெச—வாளிக்கு நாலுங்கிடைக்கணும்
செல்வம்—அனைவர்க்கும் சரிநிகர்கிடைக்கணும்
-அதனால்
சிந்தித்து ஒன்றுசேர்ந்தாகணும்
சிறந்த ஆட்சியை உண்டாக்கணும் (இடரே)

# பஞ்சத்திற்குக் காரணம் யார்?

(சங்கடமான சமையலைவிட்டு என்ற மெட்டு)
குறவன் குறத்தி தர்க்கம்

குறத்தி:—
கங்கைநதி பாயிறநாட்டில் காவேரி ஓடுறநாட்டில்
எங்கு பாத்தாலும் பஞ்சம் ஏ வந்தது சொல்லு கொஞ்சம்
ஊரெங்கும் பஞ்சம் வர காரணம் என்ன மச்சான்
காரணம் என்ன மச்சான், நேரிலதை சொல்லு மச்சான்

குறவன்:—
ஏர்பிடிக்கத் தெரியாதவெ எவனெவனோ நிலத்துக்காரெ
ஊரெங்கும் விளைஞ்ச நெல்லை ஒழிச்சுவைப்பா படுபாவிங்க
கொஞ்சமோயிங் கேழைமக்க
நெஞ்சொடியப் பாடுபட்டும்
கஞ்சிக்கே மார்க்கமில்லே
கவனிப்பார் யாருமில்லே
பஞ்சம் வரக்காரணமே பதுக்கி வைக்கும் கூட்டத்தாலே
பதுக்கி வைக்கும் கூட்டத்தாலே பணக்கார ஆட்சியாலே

குறத்தி:—
வகைவகையா பஞ்சாலைங்க வளநிறைஞ்ச நம்முடநாட்டில்
மாளாத துணிப்பஞ்சம் வந்ததேன் சொல்லு கொஞ்சம்
ஊரெங்கும் துணிப்பஞ்சம் காரணம் என்ன மச்சான்
காரணம் என்ன மச்சான் நேரிலதை சொல்லு மச்சான்

குறவன்:—
அதிகாரிக்கு எலும்பைப்போட்டு
அளவற்ற நூலும்துணியும்
அண்டர்கிரௌண்ட் மார்க்கெட்டிலே
அடிக்கிறான் மில் முதலாளி
சிந்திடவே ரத்தவேர்வை எந்தநேரம் பாடுபட்டும்
கந்தைக்கே மார்க்கமில்லே கவனிப்பார் யாருமில்லே
காரணம் இத்தனைக்கும் காங்கிரசு ஆட்சியேதான்
காங்கிரசு ஆட்சியிலே கடைப்பிடிக்கும் கொள்கையேதான்.

அரசியல் பூங்காவிலே மீண்டும்!

# "ஜனசக்தி"

கம்யூனிஸ்ட் வார இதழ்
30—9—51-ம் தேதி மலர்கிறது.

**அவசியம் வாங்கிப் படியுங்கள்!**

12-பக்கம் விலை 3 அணா. வருட சந்தா ரூ. 9,
ஆறுமாத சந்தா ரூ. 4-8-0.

48, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை. 2.

புதுமைப் பாடல் புத்தகம் கிடைக்கும் இடம்:—

தோழர், **வெ. நா. திருமூர்த்தி.**
7/8 வடக்கு மாரியம்மன் கோவில் தெரு,
கருங்கல்பாளையம், ஈரோடு,

குறிப்பு:- வியாபாரிக்கு 25% கழிவு உண்டு.

ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ், ஈரோடு.